**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் புதன்கிழமை**

<u>அமர்வு வழக்கு எண்.295/2023</u>

<u>CNR- TNKK-000923-2023</u>

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>குலசேகரம் காவல் நிலையம்.<br>குற்ற எண்.62/2023 |
| எதிரிகளின் பெயர்கள் | : | பிரபு (எ) மணிகண்டன்<br>த.பெ. நாகமணி<br>நெட்டம்பாறவிளை<br>குளச்சவிளாகம்<br>பொன்மனை அஞ்சல். |
| அரசு தரப்பில் எதிரியின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| நீதிபதியின் முடிவு | : | எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றவாளி இல்லை. |
| தீர்ப்புரை | : | எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றவாளி அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரியை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கில் ஆர்.பி. எண்7/2025—ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 உடைந்த கண்ணாடி துண்டுகள் கொஞ்சம், சா.பொ2 கருங்கல் சிறியத ஒன்று ஆகியவைகளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தர விடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பு 11.03.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. என். விஜயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

கடந்த 04.04.2023ம் தேதி சாட்சி 1 சுரேஷ்குமார் TN 74 N 1816 என்ற பதிவு எண் கொண்ட தடம் எண். 89 பி மார்த்தாண்டம் டு பெருஞ்சாணி பேருந்தை ஓட்டி 20.50 மணிக்கு பெருஞ்சாணி வந்ததும் காங்கிரஷ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தியை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ததை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் நாகர்கோவிலுள்ள பி.ஜே.பி கட்சி அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ததால் இரு தரப்பினருக்கும் பிரச்சினை ஏற்பட்டு பி.ஜே.பி கட்சியின் நிர்வாகிகளை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைத்ததால் ஏதாவது அசம்பாவிதம் சம்பவங்களை ஏற்பட வாய்ப்பு உள்ளது என கருதி அரசு போக்குவரத்து

கழகத்தின் உயர் அதிகாரிகள் உத்தரவு படி 04.04.2023 ம் தேதி கடைசி டிரிப்பை ரத்து செய்துவிட்டு பயணிகளை ஏற்றாமல் பேருந்தை திருவட்டார் பணிமனையில் கொண்டு சென்ற நிறுத்துவதற்காக வேண்டி பெருஞ்சாணியில் இருந்து 20.55 மணிக்கு பேருந்தை சாட்சி 1 ஓட்டி 21.00 மணிக்கு மங்கலம் ஏலாக்கரை பாலத்தின் முன்பு ராஜன் என்பவரது வீட்டின் அருகில் செல்லும் போது சாட்சி 1 ஓட்டி வந்த பேருந்தை எதிரி வாழைத்தோட்டத்தின் உள் மறைந்து இருந்து கொண்டு மேற்படி பேருந்தின் முன்பக்க கண்ணாடியை கருங்கல் கொண்டு எறிந்து உடைத்து அரசுக்கு ரூ–7,000/– சேதம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குலசேகரம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 42/2023 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு எண் 295/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 மற்றும் 2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. ( *** அ.சா.ஆ–4 குறியீடு செய்யப்படவில்லை)

6. <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**</u>

அ.சா.1 சுரேஷ்குமார் தனது சாட்சியத்தில், சம்பவத்தில் ஈடுபட்டது ஆஜர் எதிரியா என்று தனக்கு சரியாக தெரியவில்லை என்றும், 05.04.2023ம் தேதி தடம் எண்.89 பி–யில் பெருஞ்சாணியிலிருந்து – மார்த்தாண்டம் நோக்கி பேரூந்து எண்.TN 74 N 1816 பேருந்தை இரவு 08.50 மணிக்கு பெருஞ்சாணியிலிருந்து எடுத்து மார்த்தாண்டம் நோக்கி வந்து கொண்டிருந்த போது மங்கலம் ஏலாக்கரை பக்கம் வந்த போது அடையாளம் தெரியாத நபர் பேரூந்தில் கல்லால் எறிந்து விட்டதாகவும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் அ.சா.ஆ.1 என்றும், காவல்துறையினர் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரிக்கும் போது அடையாளம் தெரியாத நபர் என்று தான் சொன்னதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 ஜெயசீலன் தனது சாட்சியத்தில். 05.04.2023ம் தேதி தடம் எண்.89 பி–யில் பெருஞ்சாணியிலிருந்து – மார்த்தாண்டம் நோக்கி பேரூந்து எண்.TN 74 N 1816 பேருந்தை இரவு 08.50 மணிக்கு பெருஞ்சாணியிலிருந்து எடுத்து மார்த்தாண்டம் நோக்கி வந்து கொண்டிருந்த போது மங்கலம் ஏலாக்கரை பக்கம் வந்த போது அடையாளம் தெரியாத நபர் பேரூந்தில் கல்லால் எறிந்து விட்டதாகவும், காவல்நிலையத்தில் சுரேஷ்குமார் புகார் கொடுத்ததாகவும், காவல்துறையினர் விசாரித்த போது போலீசார் விசாரிக்கும் போது அடையாளம் தெரியாத நபர் என்று தான் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.7 ஜெயக்குமார் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்டும் சேதமதிப்பு சான்று தான் வழங்கியது தான் என்றும், அரசு பேருந்து எண்.TN 74 N 1816 பேரூந்தை அடையாளம் தெரியாத நபர்கள் கல் வீசி தாக்கியதில் பேரூந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து அதற்கு ரூ.7,000/– சேதம் ஏற்பட்டதாக சான்று வழங்கியதாகவும், அந்த சேதமதிப்பு சான்று அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.8 திரு. மோசஸ் தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் குலசேகரம் காவல்நிலையத்தில் 05.04.2023ம் தேதி 02.00 மணிக்கு தான் பணியில் இருந்த போது சேகரபிள்ளை, சுரேஷ்குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மை படி நிலைய குற்ற எண். 62/2023 பிரிவுகள் 3 (1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்துவதின் சட்ட படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்ததாகவும், அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.9 திரு. பாலமுருகன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் நக்சல் சிறப்பு அலுவல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், இதற்கு முன்னர் குலசேகரம் காவல் ஆய்வாளராக இருந்த போது 05.04.2023ம் தேதி 02.30 மணிக்கு குலசேகரம் காவல்நிலைய குற்ற எண்.62/2023 பிரிவுகள் 3(1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுத்தும் சட்ட படியான வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு அதிகாலை 03.00 மணிக்கு சென்று சாட்சிகள் ஜெகன் மற்றும் ராஜேஷ் ஆகியவர்கள் முன்பாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் கண்ணாடி துண்டுகள் மற்றும் கருங்கல் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 என்றும், அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 95 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அந்த படிவம் 95 அ.சா.ஆ.8 என்றும், கண்ணாடி துண்டுகள் சா.பொ.1 என்றும், சிறிய கருங்கல் சா.பொ.2 என்றும், பின்னர் சம்பவ இடத்தில் சாட்சிகள் ராஜன், ஸ்ரீகலா, பாலசந்திரன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன் பின்னர் காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் சுரேஷ்குமார், ஜெயசீலன் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் 19.05.2023ம் தேதி திருவட்டார் பணிமனை சென்று சேதமதிப்பு சான்று வழங்கிய சாட்சி ஜெயக்குமார் என்பவரை விசாரித்து சேதமதிப்பு சான்று பெற்றதாகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது விசாரணையை முடித்து 19.05.2023ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன்

கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

12. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

13. ***பிரச்சனைக்கான தீர்வு*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, எதிரி மீது பிரிவு. 3 of TNPPDL Act 1992 ன் படி குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

14. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் எதுவும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

15. இருதரப்பு வாதங்கள், வழக்கு ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

16. அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1ம் அ.சா.2ம் தங்களது சாட்சியத்தில், சம்பவத்தில் ஈடுபட்டது ஆஜர் எதிரியா என்று தங்ளுக்கு சரியாக தெரியவில்லை என்றும், 05.04.2023ம் தேதி தடம் எண்.

89 பி–யில் பெருஞ்சாணியிலிருந்து – மார்த்தாண்டம் நோக்கி பேரூந்து எண்.TN 74 N 1816 பேருந்தை இரவு 08.50 மணிக்கு பெருஞ்சாணியிலிருந்து எடுத்து மார்த்தாண்டம் நோக்கி வந்து கொண்டிருந்த போது மங்கலம் ஏலாக்கரை பக்கம் வந்த போது அடையாளம் தெரியாத நபர் பேரூந்தில் கல்லால் எறிந்து விட்டதாகவும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் அ.சா.ஆ.1 என்றும், காவல்துறையினர் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரிக்கும் போது அடையாளம் தெரியாத நபர் என்று தான் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3, அ.சா.4 தங்களது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.5, 6 தங்களது சாட்சியத்தில் தங்களிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தங்களுடையது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி பேருந்தின் முன்பக்க கண்ணாடியை கருங்கல் கொண்டு எறிந்து உடைத்து அரசுக்கு ரூ–7,000/– சேதம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பு வழக்கு. ஆனால் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தில், அவ்வாறு எதிரி பேருந்தின் முன்பக்க கண்ணாடியை கருங்கல் கொண்டு எறிந்து உடைத்து அரசுக்கு ரூ–7,000/– சேதம் ஏற்படுத்தியதாக சாட்சியத்தை முன்னிடவில்லை. அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 முதல் அ.சா.6 சம்பவத்தில் எதிரி ஈடுபட்டதாக கேட்கப்பட்ட கேள்வியை மறுத்து சாட்சியத்தை முன்னிட்டுள்ளார்கள். அ.சா.1 முதல் அ.சா.6 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவாக சாட்சியம் எதையும் அளிக்காமல் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார்கள்.

17. மேலும் அரசு தரப்பில் வழக்கு சம்பவத்தில் எதிரியை தொடர்புபடுத்தி கூறக் கூடிய எந்தவொரு சாட்சியமும் இல்லை. எனவே இந்த வழக்கில் எதிரி அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ளதை போல குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் எனக் கூறுவதற்கு எந்த விதமான கண்ணுற்ற சாட்சியமும் இல்லை. அவ்வாறான

நிலையில் புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.8, 9, ன் சாட்சியம் அரசுத் தரப்பு வழக்கை மேம்படுத்துவதாகவோ அரசு தரப்பில் சொல்லப்படுவதை போல வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டார் என்பதை நிரூபிக்கக் கூடியதாகவோ அமையாது.

18. எனவே இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டுள்ளார் என்பதை நிரூபிக்கக் கூடிய சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதால் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, எதிரி மீது பிரிவு 3 of TNPPDL Act 1992 படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் இவ்வழக்கில் ஆர்.பி. எண்7/2025–ல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 உடைந்த கண்ணாடி துண்டுகள் கொஞ்சம், சா.பொ2 கருங்கல் சிறியது ஒன்று ஆகியவைகளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.04.02 12:09:25 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்

**இணைப்பு:–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | – | திரு. சுரேஷ்குமார் |
| 2) | அ.சா.2 | – | திரு. ஜெயசீலன் |
| 3) | அ.சா.3 | – | திரு. ராஜன் |
| 4) | அ.சா.4 | – | திரு.பாலசந்திரன் |
| 5) | அ.சா.5 | – | திரு. ஜெகன் |
| 6 | அ.சா.6 | – | திரு. ராஜேஷ் |
| 7) | அ.சா.7 | – | திரு. ஜெயக்குமார் |
| 8) | அ.சா.8 | – | திரு.மோசஸ் |
| 9) | அ.சா.9 | – | திரு. பாலமுருகன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் ;**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | – | சேதமதிப்பு |
| 3. | அ.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | – | |
| 5. | அ.சா.ஆ.5 | – | பார்வை மகஜர் |
| 6. | அ.சா.ஆ.6 | – | வரைபடம் |
| 7. | அ.சா.ஆ.7 | – | அத்தாட்சி |
| 8. | அ.சா.ஆ.8 | . | படிவம் 95 |

( *** அ.சா.ஆ–4 குறியீடு செய்யப்படவில்லை)

**அரசு தரப்பு சான்று பொருள்கள்**

| | | |
|---|---|---|
| சா.பொ.1 | – | உடைந்த கண்ணாடி துண்டுகள் கொஞ்சம், |
| சா.பொ.2 | – | பொ2 கருங்கல் சிறியது ஒன்று |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>**

– இல்லை –

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்;</u>**

– இல்லை –

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.02 12:09:34 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்